# பத்திரிக்கை செய்தி

## விசைத்தறி மின் இணைப்பு வழங்க ரூ.6,000/- லஞ்சம் கேட்டு வாங்கிய பொறியாளர் மற்றும் இரண்டு வயர்மேன்கள் கைது

புகார்தாரர் திரு.பாபு, ஆர்.கே.பேட்டை, திருவள்ளூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய வீட்டிற்கு விசைத்தறி மின்இணைப்பு வேண்டி வி.புதூர் மின்வாரிய அலுவலகம், திருவள்ளூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். திரு.சுரேஷ், உதவி பொறியாளர் மற்றும் திரு.டி.ஆர்.சண்முகம், வயர்மேன், வி.புதூர் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மினபகிர்மான கழகம், திருவள்ளூர் மாவட்டம் ஆகியோர்கள் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து புகார்தாரருக்கு விசைத்தறி மின்இணைப்பு வழங்க தங்களுக்கு ரூ.6,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், திருவள்ளூர் மாவட்ட லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 28.05.2024, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சுரேஷ், உதவி பொறியாளர் மற்றும் திரு.டி.ஆர்.சண்முகம், வயர்மேன் அவர்களின் உத்தரவின்படி திரு.நித்யானந்தம், மற்றொரு வயர்மேன் அவர்கள் லஞ்ச பணம் ரூ.6,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

# PRESS NOTE

## ASSISTANT ENGINEER AND HIS TWO SUBORDINATES (WIREMAN) WERE ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE RS.6,000/- TO PROVIDE A COMMERCIAL EB SERVICE CONNECTION TO THE POWERLOOM OWNER

The complainant Tr.Babu, is residing at R.K.Pet, Thiruvallur District. The complainant had applied a powerloom EB service connection at V.Pudhur EB office, TANGEDCO, Thiruvallur District. Tr.Suresh, Assistant Engineer and Tr.Shanmugam, Wireman, V.Pudhur EB Office, TANGEDCO, Thriuvallur District were demanded bribe of Rs.6,000/- to provide the EB service connection. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Thiruvallur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (28.05.2024). During trap proceedings, on the instructions of Tr.Suresh, Assistant Engineer and Tr.Shanmugam, Wireman, Tr.Nithyanandam, another Wireman received the bribe amount of Rs.6,000/- from the complainant. All three accused were arrested.